**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, HOSUR**

M.C.O.P. NO : 01/2017

Deposition of : Rw1

Solemnly affirmed and on date 13.12.2018 in accordance with the provision with the Act of 1983

| | | | |
|---|---|---|---|
| NAME | : Ismail | FATHER'S NAME | : |
| VILLAGE | : | TALUK | : |
| CASTE | : | CALLING | : |
| RELIGION | : | AGE | : |

**முதல் விசாரணை:**

நான் இம்மனுவில் 3-ம் எதிர் மனுதாரர். என்னுடைய முதல் விசாரணையின் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை. என் தரப்பில் வங்கி பாஸ் புத்தகம் , போட்டோ காபி எ.ம.சா.ஆ.1, ஆதார் கார்ட் எ.ம.சா.ஆ.2.

கு.வி.

1982-ல் எனக்கு மனுதாரருக்கும் திருமணமானது. முதல் மகள் பெயர் தாகேரா. இரண்டாவது மகள் தாஜூன். மூன்றாது மகன் ரகமத்துல்லாகான். 25- வருடங்கள் நானும், ரகானாவும் சேர்ந்து வாழ்ந்தோம். மனுதாரருடன் 25- வருடம் காலம் வாழ்ந்தேன் என்பதற்கு குடும்ப அட்டை அல்லது வேறு ஆதாரம் தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை. பிள்ளைகள் சிறுவயதாக இருந்தபோதே விட்டு விட்டு ஒசூர் வட்டம், முதுகானப்பள்ளி கிராமத்திற்கு வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வாக்காளர் அட்டை 2007-ம் ஆண்டு வாங்கியுள்ளேன். அதில் எஸ்.முதுகானப்பள்ளி விலாசம் உள்ளது என்றால் சரிதான். 15-வருடமாக எஸ்.முதுகானப்பள்ளியில் இருக்கிறேன் என்றால் சரியல்ல. ஆதார் அட்டை எஸ்.முதுகானப்பள்ளி விலாசத்தில் உள்ளது என்றால் சரிதான். தலாக் கொடுத்துவிட்டு நானும், மனுதாரரும் 15-வருடமாக தனிதனியாக இருக்கிறோம் என்றால்

சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து சம்மன் அனுப்பினால் ஜமத்தார் வந்து தலாக் பற்றிய விவரம் சொல்லுவார் என்றால் சரியல்ல. எனக்கு இன்னொரு திருமணமாகியுள்ளது என்றும், அவர் பெயர் பியாரிமா என்றால் இல்லை. ஷாப்பியா என்ற 10-வயது மகள் இருக்கிறார் என்றால் இல்லை. 15-வருடமாக நான் 2-வது மனைவியுடன் வாழ்ந்து வருகிறேன் என்றும், எனக்கு மனுதாரருக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. இறந்துபோன மகன் வேலை செய்த கம்பெனியில் அவருக்கு நாமினியாக மனுதாரரைதான் நியமித்துள்ளார் என்றால் தெரியாது. நான் குடும்பத்துடன் இறந்துபோன மகனை பராமரித்திருந்தால் என்னையும் கம்பெனியில் நாமினியாக எழுதி வைத்திருப்பார் என்றும், நான் தனியாக வந்துவிட்டதால்தான் எழுதிவைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர்தான் இரண்டு பெண் குழந்தைகளையும், இறந்துபோன மகனையும் கூலி வேலை செய்து காப்பாற்றினார் என்றும், நான் எப்போதும் பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோனவரின் வருமானத்தை நான் எப்போதும் சார்ந்திருக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனக்கு இழப்பீடு கோர தகுதி இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் மகன் இறந்த சமயத்தில் அவனை அடக்கம் செய்யகூட செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் மற்றவர் தூண்டுதல் பேரில் இந்த வழக்கில் தரப்பினராக சேர்ந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எவ்வித இழப்பீடும் பெற் தகுதியற்றவர் என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை-இல்லை